# வேலம்மாள் பள்ளியில் விளையாட்டு தினவிழா



▶ பொன்னேரி வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 14வது விளையாட்டு தின விழாவில் வெற்றிபெற்ற மாணவர்களை பாராட்டி பரிசுகளை ஆஸ்திரேலிய ஹாக்கி விளையாட்டு வீரர் ஆன்ட்ரூ ஜேக்கப் வழங்கினார். அருகில், தமிழ்நாடு கால்பந்து விளையாட்டு வீரர் பார்த்தசாரதி துளசி, பள்ளி முதல்வர் ஜி.ஆர்.சாந்தி, துணை முதல்வர் சீனிவாசன், உடற்கல்வி இயக்குனர் எஸ்.சுரேஷ்.

**திருவள்ளூர், ஆக.29:** பொன்னேரி வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 14ம் ஆண்டு விளையாட்டு தினவிழா நடைபெற்றது. விழாவிற்கு வேலம்மாள் கல்வி நிறுவன இயக்குனர் எம்.வி.எம்.சசிக்குமார் தலைமை வகித்து பேசுகையில், "இப்பள்ளி மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குவதுடன் விளையாட்டு, கலை போன்றவற்றிலும் ஈடுபட செய்து அவர்களை பன்முகத்திறன் உடையவர்களாக உருவாக்கி வருகிறது" என்றார்.

விழாவில், சிறப்பு விருந்தினராக ஆஸ்திரேலியா போட்டியில் பங்கேற்ற ஹாக்கி விளையாட்டு வீரர் ஆன்ட்ரூ ஜேக்கப் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கோப்பைகளை வழங்கினார். தமிழ்நாடு கால்பந்து விளையாட்டு வீரர் பார்த்தசாரதி துளசி கலந்துகொண்டு விளையாட்டுகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களை அணிவித்தார்.

இதில், பள்ளி முதல்வர் ஜி.ஆர்.சாந்தி, துணை முதல்வர் சீனிவாசன் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். பள்ளியின் உடற்கல்வி இயக்குனர் எஸ்.சுரேஷ் நன்றி கூறினார்.